மாலை பதிப்பு
# சுபீட்சம்
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com
31.08.2022 புதன்கிழமை
supeedsam.com supeedsam@gmail.com

## கையெழுத்திட மறுத்த ஜனாதிபதி

மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கு கையொப்பமிடப் போவதில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சட்டமா அதிபர் ஊடாக உயர்நீதிமன்றத்துக்கு, இன்று (31) அறிவித்தார். போதைப் பொருள் தொடர்பில் மரண தண்டனை விதிக்கப்பட்ட நான்கு குற்றவாளிகளுக்கு தண்டனையை நிறைவேற்றுவதற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2019ஆம் ஆண்டு தீர்மானித்திருந்தார். அந்த தீர்மானத்தை இரத்து செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மனுக்கள், நீதியரசர்களான விஜித் மல்லல்கொட, எல்.டி.பி. தெஹிதெனிய மற்றும் முர்து பெர்னாண்டோ ஆகியோரடங்கய குழாம் முன்னிலையில், இன்று (31) பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்போது, சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புள்ளே, ஜனாதிபதி ரணிலின் மேற்குறிப்பிட்ட தீர்மானத்தை அறிவித்தார். இவ்விடயம் குறித்து, சட்டமா அதிபரால், ஜனாதிபதியிடம் வினவப்பட்ட போது, மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கு தான் கையெழுத்திடப் போவதில்லை என்று ஜனாதிபதி தெரிவித்தாக மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் மன்றுக்கு அறிவித்தார். இது குறித்த மனுக்கள், உயர்நீதிமன்றத்தில்

02



## பாடசாலைகளுக்கு விடுமுறை

அரச மற்றும் அரச அனுமதிபெற்ற தனியார் பாடசாலைகளுக்கான தவணை விடுமுறை தொடர்பில் கல்வி அமைச்சு அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது. அதற்கமைய, பாடசாலைகளுக்கு எதிர்வரும் செப்டெம்பர் 8 முதல் 12 வரை தவணை விடுமுறை வழங்கப்படவுள்ளது. புதிய தவணைக்காக பாடசாலைகள் மீண்டும் செப்டம்பர் மாதம் 13 ஆம் திகதி மீள திறக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.




## வெள்ள அபாய எச்சரிக்கை

நாளை (01) பிற்பகல் 03.00 மணி வரை செல்லுபடியாகும் வகையில் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் களுகங்கைப் பகுதியில் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இரத்தினபுரி மாவட்டத்தின் பெல்மடுல்ல, நிவித்திகல, இரத்தினபுரி, குருவிட்ட, அயகம மற்றும் அலபாத பிரதேச செயலாளர் பிரிவுகளின் தாழ்வான பகுதிகளில் அடுத்த 24 மணித்தியாலங்களில் கணிசமான அளவு வெள்ளப்பெருக்கு ஏற்படக் கூடும் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் அப்பிரதேசங்களில் உள்ள மக்கள் இவ்விடயத்தில் மிகவும் அவதானமாக இருக்குமாறு நீர்ப்பாசன திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

## காரணமின்றி கைது செய்யப்பட்டவர்களை உடனடியாக விடுதலை செய்

தமது ஜனநாயக உரிமைகளைப் பயன்படுத்திய வன்னம் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்திய அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் மாணவர்கள் பலர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த எதேச்சதிகார செயற்பாடு எதன் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டது என்பதை அரசாங்கம் உடனடியாக வெளிப்படுத்த வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். அரசாங்கம்,அரச பயங்கரவாதத்தை நடைமுறைப்படுத்திய வன்னம் மக்களை எதேச்சதிகார ரீதியாக கைது செய்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். சர்வகட்சி வேலைத்திட்டத்திற்கு ஆதரவை கோரும் அதேவேளை, எதிர்க்கட்சி அதற்கு தயாராக இருக்கும் நிலையில், அரசாங்கம் இத்தகைய போக்கில் ஜனநாயகமற்ற மற்றும் எதேச்சதிகார செயற்பாடுகளில் ஈடுபடும் பட்சத்தில் தாம் எவ்வாறு இதற்கு ஆதரவளிப்பது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்பினார்.

## துப்பாக்கிச் சூடு

நீர்கொழும்பு நீதிமன்றத்திற்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 2 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிப்பு

## நிவாரண விடுமுறைக்கான சுற்றுநிருபம்

கொரோனா காலத்தில் அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்பட்ட நிவாரணத் திட்டத்தில் அரச உத்தியோகத்தர்களின் விடுமுறையைக் கணக்கிடுவதற்கான வழிமுறைகள் அடங்கிய சுற்றறிக்கையை பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு வெளியிட்டுள்ளது.

இராஜாங்க, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் என்ற வகையில், பிரதமர் தினேஷ் குணவர்தனவின் பணிப்புரையின் பேரில் இது தொடர்பான சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் பிரியந்த மாயாதுன்னே தெரிவித்துள்ளார். தற்போது அரச சேவையை வழமை போன்று நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், அரச அதிகாரிகளின் விடுமுறை வழமையான நடைமுறைகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

## மஹிந்த ராஜபக்ஷவுக்காக 4ரூபா கூட செலவழித்ததில்லை

முன்னாள் ஜனாதிபதிக்காக அரசாங்கம் 400 மில்லியன் அல்ல 4 ரூபா கூட செலவழித்ததில்லை என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார். பாராளுமன்றத்தில் புதன்கிழமை (31) இடைக்கால வரவு செலவு திட்ட அறிக்கை தொடர்பான விவாவதத்தில் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ரோஹண பண்டார உரையாற்றுகையில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ்வின் வீட்டை புதுப்பிப்பதற்காக 400 மில்லியன் ரூபா அமைச்சரவைக்கு சமர்ப்பித்து அனுமதித்துக்கொண்டுள்ளதாக தகவல் கிடைத்திருக்கின்றது என குறிப்பிட்டிருந்தார். இதன்போது அவசரமாக சபைக்குள் வந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஒழுங்கு பிரச்சினை ஒன்றை எழுப்பி தெளிவுபடுத்தி குறிப்பிடுகையில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ்வுக்காக 400 மில்லியன் ரூபா அல்ல, 4ரூபா கூட செலவழித்ததில்லை. என்றாலும் முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அவர்களின் விதவைகளுக்காகவும் வீடுகள் வழங்கி, அவர்களை கவனித்துக்கொள்ள அரசாங்கத்துக்கு பொறுப்பு இருக்கின்றது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன் என்றார்.

## எரிபொருள் விநியோகம் வழமைக்குத் திரும்பியுள்ளது

எரிபொருள் விநியோகத்தில் கடந்த ஓரிரு தினங்களில் நிலவிய சிக்கல் நிலைமை தீர்க்கப்பட்டு கடந்த 4 தினங்களாக போதுமானளவு எரிபொருள் விநியோகிக்கப்படுவதாக வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார். கடந்த ஒரு வாரமாக எரிபொருள் விநியோகத்தில் ஏற்பட்ட சிக்கலால் மீண்டும் வாகனங்கள் நீண்ட வரிசைகளில் காத்திருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. பல எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு எரிபொருள் கிடைக்கப் பெறாமையால் அவை மூடப்பட்டிருந்தன. அத்தோடு எரிபொருள் விநியோகத்தில் ஈடுபடும் பவுசர்களின் எண்ணிக்கை 300 இலிருந்து சுமார் 100 வரை குறைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் எரிபொருள் விநியோகம் தற்போது மீள சிராக முன்னெடுக்கப்படுவதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். அதற்கமைய கொலன்னாவை எரிபொருள் முனையத்திலிருந்து நாளாந்தம் 4000 மெட்ரிக் தொன் டீசல் மற்றும் 3000 மெட்ரிக் தொன் பெற்றோல் விநியோகிக்கப்படுகிறது.

## 48 பொருட்களுக்கு நிபந்தனை விதிப்பு

அத்தியாவசிய பொருட்கள் உட்பட பல பொருட்களின் உற்பத்தி, இறக்குமதி மற்றும் விற்பனை தொடர்பான பல நிபந்தனைகளை விதித்து நுகர்வோர் அதிகாரசபை விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது. வாடிக்கையாளரினால் கோரப்பட்ட தயாரிப்பை ஒரு நியாயமான காலத்திற்குள் தாமதமின்றி வழங்கப்பட வேண்டும் என இந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், மூலப்பொருட்களின் சிக்கல் அல்லது பிற நியாயமான உற்பத்தி சிக்கல்கள் இல்லாவிட்டால், பொருட்களின் உற்பத்தியாளர்கள் அதிகபட்ச உற்பத்தி திறனை பராமரிக்க வேண்டும். அச்சிடப்பட்ட அல்லது இலத்திரனியல் பற்றுச்சீட்டை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதுடன், பற்றுச்சீட்டின் பிரதியொன்றை விற்பனையாளரிடம் வைத்திருக்க வேண்டும் எனவும் நுகர்வோர் அதிகார சபையினால் வெளியிடப்பட்டுள்ள இந்த வர்த்தமானி அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அரிசி, கோதுமை மா, முட்டை, பருப்பு, டின் மீன், பால் மா, வெள்ளைப்பூண்டு, கோழி இறைச்சி, பயறு, உருளைக்கிழங்கு, காய்ந்த மிளகாய், சீனி, சீமேந்து, மணல், மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள், உரம் போன்ற 48 பொருட்களுக்கு இவ்வாறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நான்கு முட்டைகளுக்கு ஐந்து இலட்சம் ரூபா

நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிக விலைக்கு முட்டைகளை விற்பனை செய்த பலாங்கொடை நகரிலுள்ள வர்த்தக நிலையமொன்றின் உரிமையாளருக்கு 5 இலட்சம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. இரத்தினபுரி நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போதே குறித்த கடைக்காரர் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமான விலையில் முட்டை விற்பனை செய்தமை கண்டுபிடிக்கப்பட்டது. குறித்த கடை உரிமையாளர் பலாங்கொடை பதில் நீதவான் ஏ.எம்.எஸ். மெனிகே முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோதே இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது குறித்த கடையிலிருந்து 4 முட்டைகள் கொள்வனவு செய்யப்பட்டதாகவும், கடைக்காரர் நான்கு முட்டைகளுக்கு தலா 65 ரூபா வீதம் 260 ரூபா அறவிட்டுள்ளதாகவும் நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# காட்டு யானைகளினால் பயிர்விதைகளுக்கு சேதம்



கடந்த காலங்களில் இயற்கையாகவே விவசாயச் செய்கை ஊடாக மேட்டு நிலப்பயிர் செய்கையாளர்களிடமிருந்து பெற்று வந்த பயிர் விதைகள் குறிப்பிட்ட வருட காலமாக பெற முடியாது உள்ளது. பயிர்களை நட்டு அதிலிருந்து விதைகளை உரிய முளைத்திறன் வரையும் காவல் காத்து பெறுவதற்கிடையில் காட்டு யானைகள் விவசாயப் பயிர்களை அழிப்பதன் ஊடாக விதைகளை அறுவடை செய்ய முடியாத சூழ்நிலை உருவாகி உள்ளது. இதன் காரணமாக மேட்டுநிலப்பயிர் செய்கையாளர்கள் பயிரிடுவதற்கான விதைகள் இன்றி பல சிரமங்களை எதிர் நோக்கி வருவதாக கிழக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் இரா.துரைரெட்ணம் தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் கூறுகையில், நிரந்தரமாகவே பல பயிர் விதைகள் அழிந்து விட்டன, சில விதைகள் அழியும் தறுவாயில் உள்ளன, ஒருசில விதைகள் மாத்திரம் வியாபாரிகளால் பாதுகாக்கப்பட்டு அதிகமான விலை கொடுத்து விதைகளை வாங்க வேண்டி உள்ளது. இது ஒரு வகையான பொருளாதாரஅழிவு. எம்மிடமுள்ள வளத்தை அழிப்பதற்குச் சமனாகும்.பல மடங்கு நிதிகளைக் கொடுத்து விதைகளை நடும் பட்சத்தில் அதை பாதுகாத்து அடுத்த வருடம் நடுவதற்கு அவ் விதைகள் முளைத்திறன் அற்றவையாக உள்ளன. இதுவும் திட்டமிட்ட செயற்பாடகவே கருத வேண்டி உள்ளது. ஒரு வகையில் பயிர் விதைகளுக்கு நோய் தொற்றுகின்றன. பாமர விவசாயிகள் குறைந்த விலையில் விதைகளைப் பெற முடியாமல் உள்ளன. அதிகவிலை கொடுத்து வாங்குவதற்கு நிதி உதவி இல்லாமல் உள்ளன, யானைகளிடமிருந்து பயிர்களை பாதுகாக்க முடியாத சூழ்நிலை உருவாகியுள்ள நிலை ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இதற்குரிய திணைக்களங்கள், நிறுவனங்கள், மேட்டுநிலப்பயிர் செய்கையாளர்களுக்கு விதைகளை பாதுகாத்துக் கொள்வதற்கான செயற்திட்டங்களை அமுல்படுத்துகின்றனரா? அப்படியாயின் ஏன் சமூக மட்டத்தில் பயிரிடும் விதைகள் எல்லைப் புறங்களிலுள்ள கிராமங்களில் அற்றுப் போகின்றன. உதாரணம் பெரிய சுரக்காய்,பாம்புப்பயற்றை இருந்து இருபதுக்கு மேற்பட்ட விதைகள் இல்லாமலாக்கப்பட்டதோடு, மரவள்ளித்தடி ஒரு வகையான வற்றாளைக் கொடிகளும் மாறுகின்றளவிற்கு நிலைமை உருவாகியுள்ளது.

# வரலாற்று சாதனையை நிலைநாட்டியது மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம்





அண்மையில் வெளியாகிய உயர்தரப்பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்பு முதன்முறையாக உயர்தரத்தில் விஞ்ஞானத்துறையில் தோற்றி ஒருமாணவன் வைத்தியத்துறைக்கு தெரிவாவதற்கான வாய்ப்பினைப் பெற்றுள்ளார். குறித்த வலயத்திற்குட்பட்ட முதலைக்குடா மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்ற ரவீந்திரன் யுவராஸ் என்ற மாணவனே 2ஏ,வீ சித்திகளை பெற்று மாவட்டத்தில் 41வது நிலையையும் பெற்றுள்ளார். இதேவேளை பல்வேறு வளப்பற்றாக்குறைகள் உள்ளபோதிலும், கலைப் பிரிவில் முனைக்காடு விவேகானந்த மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்ற இரு மாணவிகள் மாவட்டத்தில் 2ம், 4ம் நிலைகள் பெற்றுள்ளமையும் எடுத்துக்காட்டத்தக்கது. மேலும், குறித்த வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயின்ற 7கலைத்துறை மாணவர்களும் 3வர்த்தகத்துறை மாணவர்கள் 3ஏ சித்திகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்களை வலயக்கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம் நேரடியாக சென்றும் வாழ்த்தியிருந்தார்.





விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு கொட்டகலை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் நேற்று (31) நடைப்பெற்றன. இதன்போது கொட்டகலை பிரதேச சபைத் தலைவர் ராஜமணி பிரசாத் அவர்களும் பூஜைகளில் கலந்துக்கொண்டார்.

**தலவாக்கலை பி.கேதீஸ்**

# தேசிய உயிரியல் சாதனையாளருக்கு அவர் கற்ற பாடசாலையில் பாராட்டு



**( காரைதீவு நிருபர் சகா)**

அண்மையில் வெளியான கபொத உயர்தர பரீட்சை முடிவின்படி உயிரியல் துறையில் அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்று சாதனை படைத்த காரைதீவைச் சேர்ந்த தமிழ்வாணன் துவாரகேஷ் அவர்களுக்கு அவர் கற்ற பாடசாலையான ,மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரியில் வரவேற்பும் பாராட்டும் நடைபெற்றது. பாடசாலை அதிபர் பயஸ் ஆனந்தராஜா தலைமையில் நேற்று நடைபெற்ற இந்த நிகழ்வில், சாதனை மாணவனின் தந்தையார்டாக்டர்தமிழ்வண்ணன்,அவரது தாயார் டாக்டர் பாகீரதி தமிழ்நாட்டின் ஆகியோர் வரவேற்கப்பட்டனர். மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் அருள் தந்தை ஜோசப் பொன்னையா அடிகளார் கலந்து சிறப்பித்தார். பாராட்டுரை வழங்கி சாதனை மாணவனுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர். ஆசிரியர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டார்கள்.

# முச்சக்கரவண்டி சாரதியொருவர் கைது

**எப்.முபாரக்**

ஹெரோயின் போதைப் பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் முற்சக்கரவண்டி சாரதியொருவர் நேற்றுமுந்தினம் (29) கைது செய்ப்பட்டுள்ளதாக பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர். திருகோணமலை– லல்லேன் பகுதியில் முற்சக்கரவண்டி சாரதியொருவர் ஹெரோயின் போதைப் பொருள் விற்பனை செய்து வருவதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமையவே இந்த கைது கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. குறித்த சந்தேகநபரை பின் தொடர்ந்து புலன் விசாரணைகளை மேற்கொண்ட போது அவர் போதைப் பொருள் விற்பனை செய்து வருவதாகதெரியவந்துள்ளது.இந்நிலையில் சந்தேகநபரை சோதனையிட்டபோது 05 கிரேம் 50 மில்லி கிரேம் ஹெரோயின் போதைப் பொருள் மற்றும் 2 கிரேம் 60 மில்லி கிரேம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவின் திருகோணமலை பிரிவினர் தெரிவித்துள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர் திருகோணமலை லல்லேன் பகுதியைச் சேர்ந்த 40 வயதுடையவர் எனவும் தெரிவித்துள்ளனர்.

கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய
வருடாந்த மகோற்சவம் - 2022



கல் நந்தி புல்லுண்டு
வெள்ளையரை துரத்தியடித்த
தான்தோன்றீஸ்வரர் மகிமை காண வாரீர்!
கொடியேற்றம் : 29.08.2022
தேரோட்டம் : 11.09.2022
விளம்பர அனுசரணையாளர் மு.அருட்செல்வம் (மகிழடித்தீவு)

# நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்தில் இரண்டு மாணவர்களுக்கு மூன்று ஏ சித்திகள்



**( காரைதீவு நிருபர் சகா)**

சம்மாந்துறை வலயத்துக்கு உட்பட்ட நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலய தேசிய பாடசாலையில் இம்முறை க.பொ.த.உயர்தரப்பரீட்சைக்கு தோற்றிய 21 மாணவர்களுள் 18 மாணவர்கள் மூன்று பாடங்களிலும் சித்தி பெற்றிருக்கின்றார்கள் என்று பாடசாலை அதிபர் சீ.பாலசிங்கன் தெரிவித்தார். அதில் இரண்டு மாணவிகள் மூன்று பாடங்களிலும் மூன்று" ஏ" சித்திகளை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்திருப்பதாக அதிபர் தெரிவித்தார்.

அமிர்தலிங்கம் குவார்த்தனா, சிவபாலன் திவ்யபாரதி ஆகிய இரண்டு மாணவிகள் மூன்று "ஏ" சித்திகள் பெற்றுள்ளனர். மேலும், பத்து மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகும் வாய்ப்பு உள்ளதாக தெரிவித்தார். பின் தங்கிய சூழலில் உள்ள இப் பாடசாலையில் இத்தகைய சாதனை படைத்துள்ளமை பாராட்டுரியது என்று குறித்த மாணவிகளையும் சித்தி பெற்ற 10 மாணவர்களையும் அந்த பாடசாலையின் மேம்பாட்டு நிகழ்ச்சி திட்ட இணைப்பாளர் வி.ரி. சகாதேவராஜா, கோட்டக்கல்விப் பணிப்பாளர் திருமதி நிதர்ஷினி மகேந்திரகுமார், வலய கல்விபணிப்பாளர் எஸ் எம் .எம். அமீர் ஆகியோர் பாராட்டு தெரிவித்தனர்.

சித்தி பெற்ற மாணவர்களுக்கு காலை ஒன்றுகூடலில் பிரதி அதிபர் திருமதி நிலந்தினி ரவிச்சந்திரன், உயர்தரப் பிரிவு தலைவர் ஆசிரியர் நடராஜா கோடீஸ்வரன் ஆகியோரின் ஏற்பாட்டில் பாராட்டு விழா நடைபெற்றது. இதற்கு முன், மூன்று ஆண்டுகளுக்கு முன்பு 2018 இல் செல்வி அரசரெத்தினம் மிதிலா என்ற மாணவி மூன்று "ஏ" சித்திகளை பெற்று கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு சென்றிருந்தார் , மற்றும் 2020 இல் செல்வராஜா லிபோஜினி என்ற மாணவியும் மூன்று 'ஏ" சித்திகள் பெற்று பேராதனை பல்கலைக்கழகத்திற்கு சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வவுணதீவு பொலிஸ் நிலையத்தில் கௌரவிப்பு நிகழ்வு



**(வவுணதீவு நிருபர்)**

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 156 ஆண்டு நிறைவை முன்னிட்டு மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸ் நிலையத்தில் ஓய்வு பெற்றுச் செல்லும் பொலிஸ் உத்தியோகத் தருக்கு கௌரவிப்பு நிகழ்வு புதன்கிழமை (31) வவுணதீவு பொலிஸ் நிலையத்தில் நிலையப் பொறுப்பதிகாரி நிசாந்த அப்புகாமி தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.ஆர். குமாரசிறி பிரதம அதிதியாக கலந்து கொண்டார். இதன்போது 2022 ஓகஸ்ட் – 31 அன்று ஒய்வு பெற்றுச் செல்லும் பொலிஸ் சார்ஜன் செ. நந்தகோபால் அவர்களை பாராட்டியதுடன், மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.ஆர். குமாரசிறி நினைவுப் பரிசினையும் வழங்கி வைத்தார். தொடர்ந்து பொலிஸ் நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் சிறந்த முறையில் அற்பணிப்புடன் பணியாற்றும் வவுணதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிசாந்த அப்புகாமி மற்றும் பொலிஸ் அதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் பாரட்டி கௌரவிக்கப்பட்டனர்.

# கிளிவெட்டி மகா வித்தியாலயம் மாவட்ட ரீதியில் முதலாமிடம்

**(அ . அச்சுதன்)**

க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் தி/மூ/கிளிவெட்டி மகாவித்தியாலயத்தில் கல்வி கற்ற மாணவி அருள்ராசாசனுஜாகலைப்பிரிவில்திருகோணமலை மாவட்டத்தில் முதலாவது இடத்தைப் பெற்று மூதூர் வலயத்திற்கும் பாடசாலைக்கும் பாரதிபுரம் கிராமத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இப் பாடசாலையில் முதல் முறையாக மாவட்ட ரீதியில் இவர் முதலிடம் பெற்றதையிட்டு அனைவரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.இப்பாடசாலையின் புதிய அதிபராக பா. கோணேஸ்வரராசா நியமிக்கப்பட்டதன் பின்னர் கல்வி முன்னேற்றம் அடைந்துள்ளதாக இப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். தமிழ், புவியியல், மற்றும் கர்நாடக சங்கீதம் ஆகிய பாடங்களில் இம் மாணவியு சித்தி பெற்றதோடு 2. 2186 னு புள்ளியையும் பெற்றிருந்தார். இவர் அருள்ராசா, அருள்ராசா கௌரி தம்பதிகளின் அன்புப் புதல்வி என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மொழி உரிமை பற்றிய மாவட்ட செயலமர்வு



**( காரைதீவு நிருபர் சகா)**

மனித அபிவிருத்தி தாபனம் தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டு செயற்திட்டத்தின் ஆதரவுடன், அம்பாறை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்திய மொழிஉரிமைகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்புத்திட்டம் சம்பந்தமான மாவட்ட செயலமர்வு, மற்றும் திட்ட வளர்ச்சி பற்றிய பின்னோக்கு நிகழ்வு நேற்று காரைதீவு லேடிலங்கா மண்டபத்தில் நடைபெற்றது. தாபனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி பிபி .சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதியாக காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன் இலங்கை மனிதர் உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் ஏசிஏ.அசீஸ் சம்மாந்துறை வலய உதவி கல்வி பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா அரசசார்பற்ற நிறுவனங்களின் மாவட்ட இணைப்பாளர் ஐ.எல்.எம்.இர்பான் அம்பாறை மாவட்ட தேசிய ஒருமைப்பாட்டு உத்தியோகத்தர் பிரதீஸ்கரன் பிரான்சிஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

இதன்போது ,திட்ட வளர்ச்சி பற்றிய கருத்துக்கள் பரிமாறப்பட்டதோடு இத்திட்டத்திற்கு உதவியோருக்கு பதக்கம் நினைவு பரிசு வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வில் தாபனத்தின் வடகிழக்கு மாகாண பணிப்பாளர் பொன்னையா சிறிகாந்த் அம்பாறை உதவி இணைப்பாளர் எம்.ஜ. ரியால் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

# தற்காப்பு கலைகளில் தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களுக்கு தங்கபதக்கங்கள்

**( அஸ்ஹர் இப்றாஹிம்)**

தற்காப்பு கலைகளின் மிகவும் பிரபல்யம் பெற்று வரும் கராட்டே விளையாட்டில் தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவ மாணவிகள் வருடம் தோறும் இடம்பெற்று வரும் கராட்டே போட்டிகளில் தமது திறமைகளை வெளிக்காட்டுவதுடன் பதக்கங்களையும் பெற்று பல்கலைக்கழகத்திற்கு பெருமை சேர்த்து வருகின்றனர். அண்மையில் கொழும்பு சுகத்தாஸ உள்ளக அரங்கில் இடம்பெற்ற தேசிய சொட்டோகன் கராட்டே சம்பியன்சிப் போட்டியில் கலந்து கொண்டு 7 தங்கப் பதக்கங்களையும் , 7 வெள்ளிப்பதக்கங்களையும் , 2 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

ஐ.எம்.ஏ. மற்றும் தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களான என்.எம். உமைர் லெவல் 3 காத்தா போட்டியல் தங்கப் பதக்கத்தையும் குமிதே போட்டியில் தங்கப் பதக்கத்தையும் , ஏ.கே.எம்.ஹஸ்னத் கான் கறுப்புப் பட்டி காத்தா போட்டியில் தங்கப்பதக்கத்தையும் , குமிதே போட்டியில் வெள்ளிப்பதக்கத்தையும் , எம்.எம்.றிகாஸ் காத்தா போட்டியில் வெள்ளிப்பதக்கத்தையும் குமிதே போட்டியில் தங்கப்பதக்கத்தையும் ,

ஏ.எப்.ஏ. ஆஸிக் இலாஹி குமிதே போட்டியில் தங்கப்பதக்கத்தையும் , பீ.பஸ்லுல் பராஜ் குமிதே போட்டியல் வெள்ளிப்பதக்கத்தையும் ,

எஸ்.பி.கே.ரீ. வஸந்தா குமிதே போட்டியில் வெள்ளிப்பதக்கத்தையும் , எம்.எச்.முஸ்ஸிதீன் குமிதே போட்டியில் வெண்கலப்பதக்கத்தையும் சிரேஸ்ட பிரிவில் பெற்றுக் கொண்டனர். 21 வயதிற்குட்பட்ட பிரிவில் ஏ.எம்.எம்.அப்ராஸ் குமிதே போட்டியில் தங்கப்பதக்கத்தையும் , எப்.எம்.டில்ஸாத் குமிதே போட்டியில் தங்கப்பதக்கத்தையும் , ஏ.கே.நஸான் அஹமத் காத்தா போட்டியில் வெண்கலப்பதக்கத்தையும் ,குமிதே போட்டியில் வெள்ளிப்பதக்கத்தையும் ,எச்.எம்.சஸீன் குமிதே போட்டியில் வெள்ளிப்பதக்கத்தையும் , ஐ.மிப்ராத்குமிதே போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டனர். தென்கிழக்கு பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபுபக்கர் அவர்களின் வழிகாட்டலில் தென்கிழக்கு பல்கலைக்கழக கராட்டி பயிற்றுவிப்பாளர் முஹம்மது இக்பால் அவர்களின் சிறப்பான பயிற்சியின் மூலம் இம் மாணவர்கள் தொடர்ச்சியாக இந்த சாதனைகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

# எழுத்து, வாசிப்பு திறன்களை மேம்படுத்தும் செயலமர்வு

**(எச்.எம்.எம்.பர்ஸான்)**

வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலய மாணவிகளின் எழுத்து, வாசிப்பு திறன்களை மேம்படுத்தும் செயலமர்வொன்று (29) இடம்பெற்றது. மாணவிகள் மத்தியில் வாசிப்பு பழக்கத்தை ஊக்குவித்து அவர்களை சிறந்த தேடல் கொண்டவர்களாக உருவாக்கும் நோக்கில் இந்த செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

பாடசாலை நூலக பொறுப்பாசிரியர் எம்.ஐ.எம். சபீக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் க.பொ.த சாதாரண தரம் மற்றும் க.பொ.த உயர்தர மாணவிகள் கலந்து கொண்டர். இந்நிகழ்வில் அதிதிகளான கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்விப் பணிப்பாளர் வீ.ரீ.அஜ்மீர், கிழக்குப் பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் எம்.ரீ.எம். றிஸ்விமஜீதி, வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலய அதிபர் என்.சிஹாப்தீன், வாழைச்சேனை வை.அஹமத் வித்தியாலய அதிபர் யூ.எல்.




எம்.ஹரீஸ் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சம்மாந்துறை அல்-அர்சத் மாணவர்கள் 7பேர் பல்கலைக்குத் தெரிவு

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

கடந்த க.பொ.த.உயர்தரப் பரீட்சைப் பெறுபேறு வெளியாதனடிப்படையில் சம்மாந்துறை அல்–அர்சத் மகா வித்தியாலய தேசியப் பாடசாலையில் கலைப்பிரிவில் கல்வி கற்ற 07 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதில் ஒரு மாணவி 3யு சித்தியின் மூலம் மாவட்ட ரீதியில் 18ஆம் நிலையினைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார். மற்றும் ஏனைய மாணவர்கள் மூன்று பாடச் சித்திகளைப் பெற்றுள்ளனர். இம் மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு (29) பாடசாலையில் பாடசாலை அதிபர் எம்.அப்துல் ரஹீம் தலைமையில் இடம்பெற்றது. இதன் போது பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் உட்பட அவர்களது பெற்றோர்களும் கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வின் போது பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.எம். எம். அமீர், பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) ஏ.எல்.எம். மஜீட், சம்மாந்துறை கோட்டக் கல்வி அதிகாரி எம்.ஏ. சபூர் தம்பி மற்றும் பிரதி அதிபர் (நிருவாகம்) எம். அபூபக்கர், பிரதி அதிபர் (கல்வி அபிவிருத்தி) எம்.ஏ.எம். சிராஜ், பகுதித் தலைவர் எம்.எல். எச். பசீர், பாடசாலை அபிவிருத்திச் சபை செயலாளர் மற்றும் ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், நலன் விரும்பிகள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.



# சிவானந்தாவில் சுவாமி விவேகானந்தரின் 125 ஆண்டு இலங்கை வருகை நிறைவு விழா



**(காரைதீவு நிருபர் சகா)**

வீரத்துறவி சுவாமி விவேகானந்தரின் இலங்கை வருகையின் 125வது ஆண்டு நிறைவு விழாவின் ஓரங்கமாக மட்டக்களப்பு கல்லடி உப்போடை சிவானந்தா வித்யாலயத்தில் சிறப்பு விழா நேற்று இடம்பெற்றது. ராமகிருஷ்ணா மிஷன் இலங்கைக்கான தலைவர் சுவாமி அக்ஷராத்மானந்தா ஜீ மகராஜ் ஆசியுரை வழங்கினார். முன்னதாக சுவாமி விவேகானந்தரின் திருவுருவச்சிலை இராமகிருஷ்ண மிஷன் சிறுவர் இல்லத்தில் இருந்து ஊர்வலமாக சிவானந்தா வித்யாலயாலய சுவாமி நடராஜானந்தா மண்டபத்திற்கு ஊர்வலமாக கொண்டுவரப்பட்டது.

அங்கு பஞ்சாராத்தி மலர் அஞ்சலி மலர்மாலை சூட்டப்பட்டு பூஜை நடைபெற்றது. தொடர்ந்து பிரதி அதிபர் கே.சுவர்ணேஸ்வரன் வரவேற்பு உரையாற்ற கல்லடி இராமகிருஷ்ண மிஷன் குருகுல உதவி முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் அறிமுக உரை ஆற்றினார். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் மேடையேறின. சுவாமி விவேகானந்தரின் அனை லழரச அனை சிகாகோ சொற்பொழிவு காணொளி காண்பிக்கப்பட்டது. சாதனை மாணவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

# மன்னார் தீவைப் பாதுகாக்க ஆதரவை நாடுகின்றோம்

**(வாஸ் கூஞ்ஞ)**

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கம்பனிகளினால் மன்னார் தீவின் பெரும்பாலான பகுதிகளில் முன்னெடுக்கப்படவுள்ள கனியவள மண் அகழ்வு மற்றும் காற்றாலை மின்திட்டங்களிலிருந்து எமது மன்னார் தீவினை பேரழிவிலிருந்து பாதுகாக்குமாறு மிகவும் மன்றாட்டமாக வேண்டி நிற்கின்றோம் என மன்னார் வாழ் மக்கள் மன்னார் பிரஜைகள் குழு மற்றும் இங்குள்ள ஏனைய அமைப்புக்களுடன் இணைந்து ஜனாதிபதிக்கு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருக்கு ஊடாக மகஜர் அனுப்பப்பட்டுள்ளது.

மன்னார் தீவில் இல்மனைட் மணல் அகழ்வு மற்றும் விரிவாக்கம் செய்யப்படவுள்ள காற்றாலை மின் திட்டங்களுக்கு எதிராக திங்கள் கிழமை (29.08.2022) மன்னார் நகரில் மன்னார் தீவிலுள்ள மக்கள் பல நூற்றுக் கணக்கானோர் பல அமைப்புகளுடன் இணைந்து மாபெரும் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இவ் போராட்டத்தின்போது மன்னார் மாவட்ட செயலகத்துக்கு படையெடுத்துச் சென்ற மக்கள் இது தொடர்பாக ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைப்பதற்காக இரு சிறுவர்கள் மன்னார் அரசாங்க அதிபரிடம் இவ் மகஜரை கையளித்தனர். இவ் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது மன்னார் பிரஜைகள் குழுவுடன் இணைந்து சமய , தொழில்முறை , சிவில் அமைப்புக்கள் , மீன்பிடி மற்றும் விவசாய சங்கங்கள் , வர்த்தகர்கள் மற்றும் ஏனைய வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகிய நாங்கள் தீவிர அக்கறையுள்ளவர்களாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கம்பனிகளினால் மன்னார் தீவின் பெரும்பாலான பகுதிகளில் முன்னெடுக்கப்படவுள்ள கனியவள மண் அகழ்வு மற்றும் காற்றாலை மின்திட்டங்களிலிருந்து எமது மன்னார் தீவினை பேரழிவிலிருந்து பாதுகாக்குமாறு மிகவும் மன்றாட்டமாக வேண்டி நிற்கின்றோம்.

ஏலவே நிர்மாணிக்கப்பட்டுள்ள தம்பப்பண்ணி காற்றாலை மின்திட்டத்தின் விளைவாக சமூக வாழ்வாதார சவால்களை எதிர்கொண்டுள்ள மன்னார் தீவில் வசித்துவருகின்ற மக்களாகிய எமக்கும் , மன்னார் குடாவின் பலவீனமான சுற்றுச்சூழல் அமைப்புக்கும் ஏற்பட்டுள்ள எதிர்மறையான தாக்கங்களை கருத்தில் கொள்ளாமல் மேலும் இத்திட்டத்தினை விரிவுபடுத்தும் வண்ணம் அதானி குழுமம் காற்றாலை விசையாழிகளை நிறுவும்பட்சத்தில் மேலும் பல எதிர்மறையான அழிவுகளை நாம் சந்திக்கவேண்டிய மிகவும் துர்ப்பாக்கியமான நிலைமைகளுக்கு உள்ளாவோம் என்பதனை தங்களது மேலான அவதானத்திற்கு தயவுடன் அறியத்தருகின்றோம்.

ரைற்றானியம் சான்ட் நிறுவனம் என்ற ஆஸ்திரேலியாவை தளமாகக் கொண்ட நிறுவனமும் இலங்கையிலுள்ள அதன் துணை நிறுவனங்களும் , உலகளவில் விரும்பப்படும் மூலப்பொருளான டைட்டானியம் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் கனரக உலோகங்களை , முதன்மையானதாக காணப்படுகின்ற பாரியளவிலான இல்மனைட் மணலை மன்னார் தீவிலிருந்து அகழ்வதை மேற்கொள்ளதிட்டமிட்டுள்ளன.மேற்படிஅகழ்விற்காக இவர்களினால் ஒதுக்கப்பட்ட பரப்பளவு 204 ச.கி. கி.மீ. ஆகும். ஆயினும் மன்னார் தீவின் மொத்த பரப்பளவு 140 சதுர கிலோமீட்டர் மட்டுமே என்பதால் , தீவினை அண்டிய கரையோரப் பகுதிகளையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். ரிஎஸ்எல் இதை 50 வருட திட்டமாக கருதுகிறது.கட்டத்தை நிறைவு செய்துள்ளது. தற்போது தொழில்துறை சுரங்க உரிமத்திற்கு விண்ணப்பித்துள்ளது.

மன்னார் தீவில் வசித்துவருகின்ற குடிமக்களாகிய நாம் இதனை முன்னெடுத்துச் செல்வதை நிறுத்துவதற்கான தங்களது ஒத்துழைப்பினை கோரி நிற்கின்றோம். ஏப்ரல் 2021 இல் புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தின் சட்டதிட்டங்களை மீறிய காரணத்தினால் கடந்த ஏப்ரல் 2021ல் ரிஎஸ்எல் நிறுவனத்திற்கு வழங்கப்பட் அனைத்து ஆய்வு உரிமங்களும் இரத்து செய்யப்பட்டது. ஆயினும் அனைத்து உரிமங்களும் கடந்த 2021 நவம்பர் மாதம் மர்மமான முறையில் மீண்டும் வழங்கப்பட்டன. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மன்னார் குடிமக்கள் குழு பலமுறை கோரிக்கை விடுத்தும் எங்களுக்கு எந்த தகவலும். வழங்கப்படவில்லை.

முன்மொழியப்பட்ட அகழ்வு மற்றும் சுரங்க நடவடிக்கை – ஒரு மணல் தீவில் 12 மீட்டர் ஆழத்திற்கு – தீவு முழுவதும் கடல் நீர் ஊடுருவி தீவின் முக்கிய வாழ்வாதாரமான மீன்பிடி மற்றும் விவசாயத்தின் அழிவைக் குறிக்கிறது. தற்போது மன்னார் தீவில் 12000 குடும்பங்கள் மீன்பிடி தொழிலையே பிரதான வாழ்வாதாரமாக நம்பியுள்ளனர். ஏற்கனவே மன்னார் தீவின் 63 வீதமான பகுதி கடல் மட்டத்திற்கு கீழேயே உள்ளது. விஞ்ஞான ரீதியில் முன்மொழியப்பட்ட மண் அகழ்வானது மன்னார் தீவில் உயிர் வாழக்கூடிய நன்னீர் நீர்நிலையை அழித்துவிடும். மண் அகழ்வானது கடலின் ஹைட்ராலிக் அழுத்தத்தை நன்னீர் நீர்த்தேக்கத்தின் பலவீனமான சக்திக்கு எதிராக தள்ளும் உப்பு நீரின் ஊடுருவல் நன்நீர் விநியோகத்தை மாசுபடுத்த அனுமதிக்கிறது. இதன் விளைவாக தாவர உயிர்கள் இறக்கத் தொடங்கும் அதைத் தொடர்ந்து விலங்குகள் மற்றும் இறுதியாக மனிதர்கள் அதாவது மன்னார் தீவில் வசிக்கும் மாவட்டத்தின் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் வாழத் தகுதியற்றதாக மாறும்.

பருவநிலை மாற்றத்தின் விளைவாக கடல் மட்டம் உயருவதால் இது மோசமாகும். காற்றாலை திட்டத்தால் சுற்றுச்சூழல் சமநிலை மேலும் பாதிக்கப்படும். இலங்கை அதன் வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் உள்ளது. கனரக உலோகங்கள் விற்பனை மற்றும் காற்றாலை ஆற்றலை உற்பத்தி செய்வதன் மூலம் வெளிப்படையான 'விரைவில் பணக்காரர்' என்ற வாய்ப்பைக் கைப்பற்றுவதற்கான தூண்டுதல் ஒரு பொருளாதார உயிர்நாடியாக கவர்ச்சியூட்டுவதாகத் தோன்றலாம் ஆனால் மன்னார் குடியிருப்பாளர்களுக்கு அவர்களின் இருப்பை அச்சுறுத்தும் பேரழிவை ஏற்படுத்துகிறது. 'இந்த சர்வதேச நிறுவனங்கள் வளரும் நாடுகளுக்கு வந்து நாட்டிற்கு அடிப்படையாக வேர்க்கடலையைக் கொடுக்கும் மூலப்பொருளைப் பிரித்தெடுக்கின்றன மற்றும் ஒட்டுமொத்த சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பிரச்சினைகளையும் ஏற்படுத்துகின்றன என கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கலாநிதி சம்பத் செனவிரத்ன எச்சரிக்கிறார்.

சுருக்கமாக எதிர்மறையான தாக்கங்கள் மனிதர்கள் விலங்குகள் மற்றும் தாவரங்களுக்கு கடல் நீர் ஊடுருவல் மற்றும் நன்நீர் இழப்பு. கடல் அரிப்பு மற்றும் வாழக்கூடிய நிலம் இழப்பு விவசாயம் மீன்பிடி மற்றும் பனைவளம் சார்ந்த தொழில் உள்ளிட்ட வாழ்வாதாரங்கள் மற்றும் தினக்கூலியாளர்களுக்கு இழப்பு. நில அபகரிப்பு ஏழைகள் மற்றும் அவர்களின் எதிர்கால நிலைத்தன்மையை எதிர்மறையாக பாதிக்கும். மாவட்டத்தில் முக்கிய சுற்றுலாத் தலமாக விளங்கும் புலம்பெயர் பறவைகள் உள்ளிட்ட வன உயிரினங்களின் அழிவு ஒலி மாசுபாடு குழந்தைகளின் கல்வி உட்பட வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் பாதிக்கிறது.

மன்னார் ஏற்கனவே மூன்று தசாப்தகால உள்நாட்டுப் போர் மற்றும் பரந்த வறுமையின் குடிமக்களால் அதிர்ச்சியடைந்துள்ளது. பாரியளவிலான கனியவள மண் அகழ்வு மற்றும் கூடுதல் காற்றாலைகள் இதற்கு முன் அனுபவிக்காத பேரழிவை ஏற்படுத்தும். எனவே மன்னார் தீவை என்றென்றும் அழித்து இந்த தனித்துவமிக்கதும் பல நூறு வருட வரலாற்றினைக் கொண்டதுமான எமது மன்னார் தீவினை உடையக்கூடிய மற்றும் அடர்த்தியான சனத்தொகைத் தீவை அழித்துவிடும் எந்தவொரு உடனடி மணல் அகழ்வு மற்றும் காற்றாலை மின் உற்பத்தி நடவடிக்கைகளிலிருந்தும் மன்னார் தீவைப் பாதுகாக்குமாறு நாங்கள் எங்கள் ஜனாதிபதியாக உங்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

மன்னாரை தற்போதைய மற்றும் வருங்கால சந்ததியினருக்காக காப்பாற்றிய நீண்ட கால நோக்கு கொண்ட ஜனாதிபதியாக உங்களது மரபு உறுதிப்படுத்தப்பட்டு நினைவுகூரப்படும் என்பது எமது நம்பிக்கை. என மன்னார் பிரஜைகள் குழு தலைவர் , மதம் சார் பிரதிநிதி , மன்னார் மீனவர்கள் சங்கம் தலைவர் , பிரிஜின் லங்கா நிர்வாக தலைவர் , மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியம் இணைப்பாளர் , அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் தலைவர் , மன்னார் வியாபாரிகள் சங்கம் தலைவர் , மன்னார் வர்த்தக சங்கம் தலைவர் , மன்னார் மாற்றாற்றல் புணர்வாழ்வு சங்கம் இயக்குநர் ஆகியோர் கையொப்பம் இட்டே இவ் மகஜரை அனுப்பி வைத்துள்ளனர்.

# ஸாஹிரா தேசியக் கல்லூரி மாணவர்கள் அம்பாறை மாவட்டத்தில் முதலிடம்

**அஸ்ஹர் இப்றாஹிம்**

வெளியிடப்பட்ட க.பொ.த.உயர்தர பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி ஆங்கில மொழிப் பிரிவு மாணவன் அனீஸ் அஹ்மத் அஸ்னி அஹ்மத் உயிரியல் விஞ்ஞானத்துறையில் 3 ஏ சித்திகளைப் பெற்று அம்பாறை மாவட்டத்தில் முதலிடத்தையும் , கணிதம் பிரிவில் எம்.எஸ்.எம்.ஸிமர் 3 ஏ சித்திகளைப் பெற்று அம்பாறை மாவட்டத்தில் முதலிடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளதுடன் முறையே மருத்துவ துறைக்கும் பொறியியல் துறைக்கும் தெரிவு செய்யப்படவுமுள்ளனர். கடந்த மூன்று வருடங்களாக அம்பாறை மாவட்டத்தில் உயிரியல் விஞ்ஞான துறையில் தொடர்ச்சியாக முதலிடத்தைப் பெற்று வருவதுடன் உயிரியல் விஞ்ஞானம், கணித விஞ்ஞானம் , தொழில்நுட்பவியல், கலை வர்த்தகப் பிரிவு துறைகளைச் சேர்ந்த 150 இற்கும் அதிகமான மாணவர்கள் நாட்டின் சகல பகுதிகளிலுமுள்ள பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்க தகுதி பெற்றுள்ளதாக கல்லூரி அதிபர் எம்.ஐ.எம்.ஜாபிர் தெரிவித்தார்.

# ஸஹ்ரான் - புலஸ்தினி உறவுவினை மறைத்தமை தொடர்பில் சஹ்ரானின் மனைவி மீது குற்றச்சாட்டு




**பாறுக் ஷிஹான்**

உயிர்த்த ஞாயிறு தின தொடர் தற்கொலை தாக்குதல்கலின் பிரதான குண்டுதாரியான ஸஹ்ரான் ஹாஷிமின் மனைவிக்கு எதிராக வழக்கு விசாரணையின் போது குற்ற ஒப்புதல் வாக்குமூலம் தொடர்பில் ஆட்சேபனை பொலிஸாரினால் எழுப்பப்பட்ட நிலையில் எழுத்து மூல சமர்ப்பணத்திற்காக எதிர்வரும் செப்டம்பர் மாதம் 30 திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இது குறித்த வழக்கு கல்முனை மேல் நீதிமன்ற நீதிவான் ஜயராம் ட்ரொக்ஸி முன்னிலையில் விசாரணைக்கு இன்று (30) வந்தபோதே இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதன்படி வழக்கானது இன்று விசாரணைக்காக எடுக்கப்பட்ட வேளை பிரதிவாதி ஸஹ்ரானின் மனைவி சார்பாக சிரேஸ்ட சட்டத்தரணி ரூஸ்தி ஹபீப் முஹமட் அக்ரம் உட்பட சட்டத்தரணி சலாகுதீன் சப்றீன் மூவரும் ஆஜராகி இருந்தனர். இன்றைய விசாரணையின் போது மன்றில் குற்றப்புலனாய்வு பிரிவினரிடம் ஸஹ்ரானின் மனைவியினால் ஏற்கனவே வழங்கப்பட்ட குற்ற ஒப்புதல்வாக்குமூலம் தொடர்பில் ஆட்சேபனை எழுப்பப்பட்டிருந்தது.

மேலும் ஸஹ்ரான் மற்றும் தப்பி சென்றதாக கூறப்புடும் புலஸ்தினி உறவு தொடர்பில் மறைத்தமை ஸஹ்ரானின் மனைவிற்கு எதிராக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளதுடன் குற்றப்புலனாய்வு பிரிவானது மனைவியிடம் 4 வாக்குமூலங்களை பெற்றுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நான்கு வாக்குமூலங்களும் எவ்வாறு எடுக்கப்பட்டது தொடர்பில் கேள்விகளை பொலிஸார் மன்றில் எழுப்பியதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இதனையடுத்து மீண்டும் நீதிபதி ஜயராம் ட்ரொக்ஸினால் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 30 திகதிக்கு குறித்த வழக்கு மறுதவணை இடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஸஹ்ரான் ஹாஷிமின் மனைவி அப்துல் காதர் பாத்திமா ஹாதியா இவ்வழக்கு விசாரணைக்கு வந்தபோது பலத்த பாதுகாப்புடன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தார். இது தவிர கடந்த கால வழக்கு தவணைகளின் போது குற்றப்பத்திரத்தின் இணைப்பு ஆவணங்கள் சிங்கள மொழியில் காணப்படுவதால் அவை தமிழ் மொழியில் மொழி பெயர்க்கபப்டல் வேண்டும் எனவும் அப்போதே பிரதிவாதிக்கு தன் பக்க நியாயங்களை முன்வைக்க முடியுமாக இருக்கும் எனவும் ஹாதியாவின் சட்டத்தரணி சுட்டிக்காட்டப்படிருந்தது.

அதன்படி கடந்த தவணையில் நீதிமன்றம் பிரதிவாதியான ஸஹ்ரானின் மனைவிற்கு எதிரான குற்றப்பத்திரத்தின் இணைப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்பு வழக்கு விசாரணையின்போது அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரனால் பிரதிவாதி தரப்பு சட்டத்தரணியிடம் கையளிக்கப்பட்டிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

# வலயத்தில் முதன்நிலை பெற்ற இராமகிருஷ்ணா கல்லூரி



**வி.சுகிர்தகுமார்**

வெளியான 2021.க.பொ.த. உயர்தரப்பெறுபேறுகளின் படி கமு.திகோ.ஸ்ரீ இராம கிருஷ்ணா கல்லூரியில் ( தேசிய பாடசாலை). 37 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டதுடன் வலயத்தில் முதல் நிலையினை பிடித்துக்கொண்டது.

தெரிவான மாணவர்களில் கலைப்பிரிவில் ல.பிரேம்சனா 3 ஏ சித்தியினை பெற்று மாவட்டத்தில் முதல் நிலையினையும் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் .மு.வைஷாலி 3 ஏ சித்தியினை பெற்று மாவட்ட மட்டத்தில் இரண்டாம் நிலையினை பெற்று மருத்துவ துறைக்கும் தெரிவாகியுள்ளார் என அதிபர் ஜே.ஆர்.டேவிட் அமிர்தலிங்கம் தெரிவித்தார். பரீட்சை பெறுபேறுகளின் படி திருக்கோவில் வலயத்தில் இராம கிருஷ்ணா கல்லூரியில் ( தேசிய பாடசாலை).

தொடர்ந்தும் முன்னணியில் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன்படிபல்கலைக் கழகம் செல்லவுள்ள துறை ரீதியான மாணவர்களின் எண்ணிக்கையாவன விஞ்ஞானப் பிரிவில் 09 மாணவர்களும் வர்த்தகப் பிரிவில் 07 மாணவர்களும் தொழில்நுட்ப பிரிவில் 04 மாணவர்களும் கலைப் பிரிவில் 17 மாணவர்களும் என 37 மாணவர்கள் தெரிவாகி பல்கலைக்கழகம் செல்ல உறுதியாகியுள்ளது. எனினும் காத்திருப்புப் பபட்டியல் மூலம் மேலும் பல மாணவர்கள் செல்வதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளது. துறை ரீதியாக உயர்பெறுபேறு பெற்ற மாணவர்களில் வர்த்தகத் துறையில் கல்வி கற்ற எஸ்.நோஜன், .சு.இனிதர் ஆகிய இருவரும் 3ஏ சித்தி பெற்றுள்ளனர். தொழில் நுட்ப துறையில் சித்தியடைந்த 4 மாணவர்களில் சி.. பிரவிண்காந்த் ABC பெற்றுள்ளார்.

# இருவர் தங்கப்பதக்கம் வென்று சாதனை




**அஸ்ஹர் இப்றாஹிம்**

சோட்டோகான் தேசிய கராட்டி சாம்பியன்ஷிப் போட்டியில் கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி பழைய மாணவர்கள் இருவர் தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளனர். தேசிய ரீதியில் சோட்டோகான் கராட்டி சாம்பியன்ஷிப் போட்டிகள் அண்மையில் கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. சிரேஸ்ட பிரிவில் இடம்பெற்ற இந்நிகழ்வின் போது தென்கிழக்கு பல்கலைக்கழக சார்பில் பங்கேற்ற கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி பழைய மாணவர்களான என்.எம்.உமைர் லெவல் 3 காதா மற்றும் குமிதே போட்டிகளிலும் , ஏ.கே.எம்.ஹஸ்னத் கான் கறுப்புப் பட்டி காத்தா போட்டியிலும் தங்கப் பதக்கங்களை வென்று தென்கிழக்கு பல்கலைக்கழத்திற்கும் தாம் கல்வி கற்ற கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரிக்கும் பெருமை சேர்த்துள்ளனர். இவர்களுக்கான பயிற்சிகளை தென்கிழக்கு பல்கலைக்கழக கராட்டே பயிற்றுவிப்பாளர் முஹம்மது இக்பால் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# பிரதேச சபைக்கு ஒரு கோடியே 40 இலட்சம் பெறுமதியான நீர் வழங்கும் பவுசர்

**வி.சுகிர்தகுமார்**

ஆலையடிவேம்பு பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட ஒரு கோடியே 40 இலட்சம் பெறுமதியான நீர் வழங்கும் பவுசர் சம்பிரதாயபூர்வமாக சேவையில் ஈடுபடுத்தப்படும் நிகழ்வு நேற்று மாலை கோளாவில் ஸ்ரீ விக்னேஸ்வரர் ஆலயத்தின் முன்பாக இடம்பெற்றது. பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மாகாண அமைச்சின் ஊடாக பிரதமர் தினேஸ் குணவர்த்தனவினால் கடந்த வாரம் பிரதேச சபை தவிசாளர் த.கிரோஜாதரனிடம் கையளிக்கப்பட்ட நீர் வழங்கும் பவுசரின் சேவை ஆரம்ப நிகழ்வே இவ்வாறு நடைபெற்றது. கோளாவில் ஸ்ரீ விக்னேஸ்வரர் ஆலயத்தில் இடம்பெற்று வருகின்ற ஆலய உற்சவத்தை முன்னிட்டு ஆலயத்திற்கான நீர் வழங்கும் பணியும் இதன் மூலம் இடம்பெற்றது. ஆலையடிவேம்பு பிரதேச சபையின் தவிசாளர் த.கிரோஜாதரனின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வின் ஆரம்ப பூஜை வழிபாடுகளை ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ க.கு.கௌரிசங்கர் குருக்கள் நடாத்தி வைத்தார். நிகழ்வில் பிரதேச சபையின் தொழிநுட்ப உத்தியோகத்தர் உள்ளிட்ட ஆலய நிருவாகத்தினரும் கலந்து கொண்டனர்.

# கால் புதையும் மண்ணில்

# சிற்கள் புதைந்து செல்லும்

# தேரோட்டம்

## 2022.09.11

## காண வாரீர்!




"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமுகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206